Notice is hereby further given that pursuant to provisions of Section 91 of the Act read with Rule 10 of the Companies (Management and Administration) Rules, 2014, and Regulation 42 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements), Regulations, 2015 ('Listing Regulation') that the Register of Members and Share Transfer Book of the Company will remain closed from Tuesday, September 26, 2023, to Thursday, September 28, 2023 (both days inclusive) for the purpose of the 43rd AGM of the Company.

Instruction for remote e-voting before and during the 43rd AGM:

In compliance with Section 108 of the Act read with Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014, as amended from time to time. Secretarial Standard - 2 on General Meetings issued by the Institute of Company Secretaries of India and Regulation 44 of the Listing Regulations, as amended, the Company is providing the Members the facility to exercise their right to vote at the 43rd AGM by electronic means only before as well as during the 43rd AGM in respect of the business to be transacted at the 43rd AGM and for this purpose, the Company has appointed CDSL for facilitating voting through electronic means.

Comprehensive guidance on (a) remote e-voting before the 43rd AGM, (b) participation in and joining of the 43rd AGM through VC/OAVM, (c) e-voting during the 43rd AGM, and (d) registration of email IDs, are available In the Notice of the 43rd AGM, which can be accessed and downloaded on the Company's website.

A person whose name is recorded in the Register of Members / Register of Beneficial owners maintained by the Depositories as of the cut-off date, i.e., Friday, September 22, 2023 ('Cut-Off Date') shall be entitled to avail of the facility of remote e-voting provided by CDSL, either prior to the 43rd AGM or remote e-Voting during the 43rd AGM on all the resolutions set forth in the Notice of the 43rd AGM. The remote e-voting period commences on Tuesday, September 26, 2023, at 9:00 a.m. (IST) and ends on Thursday, September 28, 2023 at 5:00 p.m. (IST). The remote e-voting module shall be disabled by CDSL for voting thereafter. The facility of e-voting will also be made available during the 43rd AGM and the Members attending the 43rd AGM, who have not cast their votes by remote e-voting, will be eligible to cast their votes through e-voting during the 43rd AGM.

Once the vote on a resolution is cast by the Member, the Member shall not be allowed to change it subsequently. The voting rights of the Members holding Equity Shares shall be in the same proportion to paid-up share capital held by them in the Company as on the cut-off date, that is Friday, September 22, 2023.

Registration of e-mail address with Company/ DP and obtaining User ID and Password for e-voting

Members holding shares in physical mode and who have not updated their e-mail addresses with the Company are requested to update the same by writing to them at www.springformtech.com. Members holding shares in dematerialized mode are requested to register/ update their email addresses with their respective DPs.

Any person holding Shares in physical form and Non-Individual shareholders, who acquire shares of the Company and become Members of the Company after the Notice is sent through e-mail and holding shares as of the cut-off date i.e., Friday, September 22, 2023, may obtain the login ID and password by sending a request at helpdesk.evoting@cdslindia.com or Issuer/RTA. However, if the Member is already registered with CDSL for remote e-voting, then he/she can use his/her existing user ID and password for casting his/her vote. If a member has forgotten their password, they can reset their password by using the "Forgot User Details/Password" or "Physical User Reset Password" options available on helpdesk.evoting@cdslindia.com or call 1800 22 55 33. In case of Individual Shareholders holding securities in demat mode who acquire shares of the Company and become Members of the Company after dispatch of the Notice and holding shares as of the cut-off date i.e., Friday, September 22, 2023, may follow the steps mentioned in the Notice of the 43rd AGM.

In case of any queries, you may refer to the Frequently Asked Questions (FAQs) for Members and the e-voting user manual for Members available at the CDSL website or call to Mr. Rakesh Dalvi, Sr. Manager, (CDSL) at 1800 22 55 33 or send him an email to helpdesk.evoting@cdslindia.com.

Helpdesk for Individual Members holding securities in demat mode for any technical issues related to log in through Depository i.e., NSDL and CDSL are as given below:

Login type	Helpdesk Details
Individual Shareholders holding securities in demat mode with CDSL	Members facing any technical issue in login can contact the CDSL helpdesk by sending a request to helpdesk.evoting@cdslindia.com or contacting toll-free no. 1800 22 55 33
Individual Shareholders holding securities in demat mode with NSDL	Members facing any technical issue in login can contact the NSDL helpdesk by sending a request to evoting@nsdl.co.in or call the toll-free no.: 1800 1020 990 and 1800 22 44 30

Mrs. Amita Sandeep Desai (Membership No. FCS 4180) of M/s Amita Desai & Co, Practising Company Secretaries has been appointed by the Board of Directors of the Company as the Scrutinizer to scrutinize the remote e-Voting process as well as for e-voting during the 43rd AGM, in a fair and transparent manner.

The results of the remote e-voting and votes cast during the 43rd AGM shall be declared not later than two working days from the conclusion of the 43rd AGM. The results declared, along with the Scrutinizer's Report, shall be placed on the Company's website at www.springformtech.com.and on the website of CDSL at www.evotingindia.com immediately after their declaration, and communicated to the Stock Exchanges where the Company's Shares are listed viz BSE and be made available on their websites at www.bseindia.com.

For **SPRINGFORM TECHNOLOGY LIMITED**
Sd/-
Pankaj Shah
Managing Director (DIN: 00945911)

Place: Mumbai
Date: September 04,2023

SUPER SPINNING MILLS LIMITED

CIN: L17111TZ1962PLC001200
Regd. Off.: 'ELGI TOWERS', P.B NO: 7113, Green Fields, Puliakulam Road, Coimbatore – 641045
Phone: 0422-2311711 Fax: 0422-2311611
Email: investors@ssh.saraelgi.com Website: www.superspinning.com

NOTICE OF THE 61ST ANNUAL GENERAL MEETING AND E-VOTING INFORMATION

Dear Members,

Notice is hereby given that 61st Annual General Meeting (AGM) of the Company will be held on Tuesday, 26th September 2023 at 2.30 PM (IST) through Video Conference (VC) / Other Audio Visual Means (OAVM) to transact the business as set out in the Notice of AGM dated 11th August 2023 in compliance with the applicable provisions of the Companies Act, 2013 and its rules framed thereunder and the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 read with the relevant circulars issued by the Ministry of Corporate Affairs ("MCA") and the Securities and Exchange Board of India ("SEBI") from time to time. In accordance with the MCA/SEBI Circulars, the Company has sent the Notice of AGM/ Annual Report via e-mail to those shareholders/members of the Company whose e-mail addresses are registered with the Company / Depositories as on 25th August 2023.

The AGM Notice along with the explanatory statement and the Annual Report for the financial year 2022-23 is available and can be downloaded from the Company's website **www.superspinning.com** and the website of Stock Exchanges in which the shares of the Company are listed i.e., BSE Limited at **www.bseindia.com** & National Stock Exchange of India Limited at **www.nseindia.com** and on the website of Link Intime India Private Limited (LIIPL) at **https://instavote.linkintime.co.in.**

Members can attend and participate in the Annual General Meeting through VC/OAVM facility only. The instructions for joining the Annual General Meeting are provided in the Notice of the Annual General Meeting.

In compliance with Section 108 of the Companies Act, 2013 read with Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014 as amended from time to time and Regulation 44 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, the Members are provided with the facility to cast their votes on all resolutions set forth in the Notice of the AGM using remote electronic voting system (remote e-voting) provided by LIIPL. Additionally, the Company is providing the facility of voting through e-voting system during the Annual General Meeting ("e-voting"). Detailed procedure for remote e-voting/ e-voting is provided in the Notice of the Annual General Meeting.

The Board of Directors of the Company has appointed Mr.M.D.Selvaraj FCS, of M/s. MDS & Associates LL

தமிழ்நாடு அரசு வேளாண்மை பொறியியல் துறை சார்பில், வேளாண் இயந்திரமாக்கும் துணை இயக்க திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய பவர் டில்லர் இயந்திரத்தை பி.ஆர். நடராஜன் எம்பி விவசாயிகளுக்கு வழங்கினார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் ஷர்மிளா, விவசாய சங்க தலைவர் சு. பழனிச்சாமி, நேரு நகர் தேவராஜ் உள்ளிட்டோர்.

ஈழப்போரில் ஈழத்தமிழர்கள் எல்லாம் செத்துக்கிட்டு இருந்த போது...

'நீ என்னுடன் தானே ஆட்டம் போட்டுக்கொண்டிருந்த'

சீமான் குறித்து நடிகை விஜயலட்சுமி பரபரப்பு வீடியோ

சென்னை, செப்.4- ஈழப்போரின் போது, ஈழத்தமிழர்கள் எல்லாம் செத்துக்கிட்டு இருந்த போது, நீ என்ன பன்ன... என்னுடன் தானே ஆட்டம் போட்டு கொண்டிருந்த என்று சீமான் குறித்து நடிகை விஜயலட்சுமி பரபரப்பு வீடியோ ஒன்று வெளியிட்டுள்ளார். இந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

நடிகை விஜயலட்சுமி வெளியிட்டுள்ள வீடியோவில் கூறியிருப்பதாவது:

வேண்டாம் சீமான்... வேண்டாம். இப்ப கூட நீங்க எடுத்து கொண்டிருக்கும் பாதை ரொம்ப தப்பாத்தான் எடுத்துக்கிட்டு இருக்க. எனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்கிறீயா. உனக்கு என்ன டா இருக்கிறது தகுதி. ஈழப்போரில் வந்து ஈழத்தமிழர்கள் எல்லாம் செத்துக்கிட்டு இருக்கும் போது, என்னுடன் தானே ஆட்டம் போட்டு கொண்டிருந்த. எல்லாம் வெளியில் வரத்தானே போகிறது. நாவை அடக்கிக்கோ சீமான். நாவை அடக்கிக்கோ. ஒரு பெண்ணோட விஷயத்தில் கொஞ்சமாவது மனச்சாட்சியுடன் நடந்துக்கோ.

எதிரில் மட்டும் நீ கிடைத்த உன் பற்களை தட்டி கொடுத்து விடுவேன் சீமான். வேண்டாம் சீமான்... வேண்டாம் என்ன. ஒரு பெண்ணோட விஷயத்தில் ரொம்ப விளையாடிக்கிட்டு இருக்க. ரொம்ப சிரிச்சிக்கிட்டு இருக்க. இப்ப வந்து 6 பேர் மேல நான் வழக்கு கொடுத்து இருக்கேன். 6 பேருடன் நான் குடும்பம் நடத்தி இருக்கேனா. அப்புறம் எதுக்கு எனக்கு மார்ச் மாதத்தில் இருந்து காசு போட வந்த. விளையாடிக்கிட்டு இருக்கியா. மக்களை ஏமாற்றி கொண்டு இருக்கியா. என் காலில் இருக்கும் செருப்பை கழற்றி சாத்து சாத்துனு சாத்துவேன் சீமான். வேண்டாம் சீமான். கொஞ்சமாவது நீ மனச்சாட்சியுடன் பெண் என்று நடந்துக்கோ. இந்த மாதரி பொய்களை சொல்லிக்கிட்டு மக்களை ஏமாற்றாதே.

திமுகவில் இருந்து எல்லோரையும் எதுக்கு இழுத்துக்கிட்டு வந்த. உனக்கு பேசுவதற்கு யோக்கியதை இல்லாமல். நீ வந்து என்னை ஏமாற்றிவிட்டு, இது வந்து அரசியல் பின்னால் இருக்கிறது. அரசியல் பின்னால் இருக்கிறது என்று சொல்ற. எதிரே மட்டும் நீ கிடைத்த சாத்து சாத்துனு சாத்திவிடுவேன் சீமான். இப்ப கூட உனக்கு காலம் மிஞ்சி போகவில்லை. ஒரு பெண் என்று மனதில் வைத்து, நியாயமாக எடுத்துக்கிட்டு போனேனா. இது நியாயமாக முடியும்.

இல்லையென்றால் என்னை பற்றி நீ அவதூறு பேச பேச.., நான் அடங்கவே மாட்டேன் சீமான். என்னை பற்றி உனக்கு தெரியும். அதனால விளையாட வேண்டாம் என்ன? என்ன பேசுறதுனு யோசித்து பேசு. போலீஸ் மட்டும் இல்லையென்றால் சென்னைக்கு வந்து முதலில் உன் வீட்டுக்கு வந்து சாத்து சாத்துனு சாத்துவேன்.

நான் அவ்வளவு கோபத்தில் இருக்கேன். வெறுப்பு ஏற்றாதே. என்ன பன்ன னுமோ உனக்கு தில்லு இருந்தா நீ நேர்மையாக பன்னு. பிரஸ் மீட்டில் அமர்ந்து கேவலம் என்று சொன்னால் ஒரே அப்பு அப்பிடுவேன் சொல்லிட்டேன். வேண்டாம் உனக்கு என்னை பற்றி தெரியும் என்று நினைக்கிறேன். என்னை வந்து கோபப்படுத்தாதே. அதை தான், நான் இந்த வீடியோ மூலம் உனக்கு சொல்லிக்கிட்டு இருக்கேன். கேவலம் கேவலம் என்று நீ சொல்லிக்கிட்டே இருந்தனு நினைச்சுகோ. நேரில் பார்க்கும் போது மூஞ்சை பார்த்து சாத்து சாத்துனு சாத்திவிட்டுவிடுவேன் பார்த்துக்கோ.

இவ்வாறு நடிகை விஜயலட்சுமி வீடியோவில் தெரிவித்துள்ளார்.

ஸ்லீப் மோடில் உள்ள லேண்டரை

40 செ.மீ உயரத்திற்கு மேலெழுப்பி விஞ்ஞானிகள் சோதனை

லேண்டரின் அனைத்து கருவிகளும் சரியாக உள்ளது

சென்னை, செப்.4- நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்ய ஜூலை 14ம் தேதி சந்திரயான் -3 செயற்கைகோள் விண்ணில் செலுத்தப்பட்டது. கடந்த 23ம் தேதி சந்திரயான்-3 திட்டத்தின் மூலம் விக்ரம் லேண்டர் திட்டமிட்டபடி நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கியது. இதைதொடர்ந்து லேண்டரில் இருந்து வெளியே வந்த ரோவரும் நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து ஆய்வு செய்தது. விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவரில் உள்ள ஆய்வுக்கருவிகள் பல்வேறு ஆய்வுகளை செய்து வருகின்றன. இந்நிலையில் தான் விக்ரம் லேண்டர் நிலவின் மேற்பரப்பில் உள்ள வெப்ப மாற்றம் மற்றும் அதிர்வுகள் பற்றி ஆய்வு செய்து முக்கிய தகவல்கள் அனுப்பியது. அதே போல் பிரக்யான் ரோவரில் உள்ள எல்ஐபிஎஸ் கருவி நிலவின் தென்துருவத்தில் சல்பர் இருப்பதை உறுதி செய்தது. மேலும் அலுமினியம், கால்சியம், அயர்ன், குரோமியம், டைட்டானியம், மெக்னீசியம், சிலிக்கான் மற்றும் ஆக்சிஜன் இருப்பதையும் கண்டுபிடித்துள்ளது. இதனிடையே விக்ரம்லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் உள்ளிட்டவற்றின் ஆயுள்காலம் என்பது வெறும் 14 நாட்கள் மட்டும். அதாவது லேண்டர், ரோவர் உள்ளிட்டவற்றில் இருக்கும் சோலார் பேனல்கள் சூரியஒளியை பயன்படுத்தி ஆய்வுக்கு தேவையான ஆற்றலை சேமித்துவைத்துகொள்ளும். அதன்படி பார்த்தால் நிலவில் விக்ரம் லேண்டர் தரையிறங்கிய பகுதியில் 14 நாள் மட்டுமே சூரியஒளி கிடைக்கும். அதன்பிறகு அடுத்த 14 நாட்கள் சூரியஒளி கிடைக்காது. அதன்படி சூரியஒளி கிடைக்காத நாட்களில் விக்ரம்லேண்டர், பிரக்யான் ரோவர் உள்ளிட்டவை நிலவில் ஓய்வு நிலையில் இருக்கும். அதாவது நிலவில் செயலிழக்க செய்யப்பட்டு நிலவிலேயே வைக்கப்படும். அதனை தொடர்ந்து ஓய்வு நிலையில் உள்ள லேண்டர் மீண்டும் பணிகளை தொடங்க ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகருமா என்ற சோதனைகளை விஞ்ஞானிகள் செய்துள்ளனர்.

இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்டுவிட்டர்பதிவு: விக்ரம்லேண்டர் தனதுகுறிக்கோள்களை நிறைவேற்றிவிட்டது. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகரும் சோதனை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டுள்ளது. தரைக்கட்டுப்பாட்டு மையத்திலிருந்து சமிக்ஞை கொடுத்தவுடன் லேண்டரில் உள்ள இன்ஜின் செயல்பட தொடங்கி 40 சென்டிமீட்டர் உயரம் வரை பறந்து எதிர்ப்பார்த்ததைபோல 30 முதல் 40 சென்டிமீட்டர் தூரம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. இந்த நடைமுறை எதிர்காலத்தில் மாதிரிகளை எடுத்து திரும்பவும் மனிதர்கள் நிலவுக்கு சென்று திரும்பும் திட்டங்களுக்கு முன்னோடியாக இருக்கும். லேண்டரில் உள்ள அனைத்து கருவிகளும் சீராக செயல்பட்டது. விண்கலம் சரியாக இயங்கியது. கருவிகளில் செயல்முறைகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்ட பின் லேண்டருக்குள் லேண்டரின் ராம்ப், காஷ்டு மற்றும் ஐஎல்எஸ்ஏ மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொது நிறுவனங்கள் குழு தலைவர் அ.சௌந்தரபாண்டியன் மற்றும் குழு உறுப்பினர்கள் இன்று கோவை சுங்கம் பஸ் டெப்போவில் ஆய்வு செய்தனர். அருகில் கலெக்டர் கிராந்தி குமார் பாடி, மேயர் கல்பனா, துணை மேயர் வெற்றிச்செல்வன், கமிஷனர் பிரதாப் மற்றும் குழு உறுப்பினர்கள் உள்ளனர்.

கோவையில் சட்டமன்ற பேரவை பொது நிறுவனங்கள் குழுவினர் ஆய்வு

கோவை, செப்4- தமிழகசட்டமன்றபேரவை பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சௌந்தரபாண்டியன் தலைமையில் கோவையில் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

முதலாவதாக பீளமேட்டில் உள்ள தொழில்நுட்ப பூங்காவை பார்வையிட்டனர். பின்னர் சுங்கத்தில் உள்ள அரசு போக்குவரத்து கழக பணிமனை, வாலாங்குளம் படகு இல்லம், உக்கடம் குறிச்சி குளம் சீரமைப்பு பணி, புட்டுவிக்கியில் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட துணைமின் நிலையம், பச்சாபாளையம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலகம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின்போது குழு உறுப்பினர்கள் அப்துல் சமது, உடுமலைராதாகிருஷ்ணன், மு.பெ.கிரி, கோவிந்தசாமி, பிரகாஷ், மாவட்ட கலெக்டர் கிராந்தி குமார் பாடி, மாநகராட்சி மேயர் கல்பனா, துணை மேயர் வெற்றிச்செல்வன், மாநகராட்சி கமிஷனர் பிரதாப் ஆகியோர் உடன் இருந்தனர்.

கூலிப்படை தலைவன் ஆற்காடு சுரேஷ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட

2 அதிமுக நிர்வாகிகள் கட்சியில் இருந்து நீக்கம்

சென்னை, செப். 4- கூலிப்படை தலைவன் ஆற்காடு சுரேஷ் கொலை வழக்கில், கைது செய்யப்பட்ட அதிமுக நிர்வாகிகள் 2 பேரை கட்சியில் இருந்து நீக்கி எடப்பாடி பழனிசாமி இன்று நடவடிக்கை எடுத்துள்ளார்.

சென்னை பட்டினம்பாக்கம் கடற்கரையில் கடந்த 18ம் தேதி பிரபல கூலிப்படை தலைவன் ஆற்காடு சுரேஷ் கொடூரமாக வெட்டி படுகொலை செய்யப்பட்டார். இது குறித்து பட்டினம்பாக்கம் போலீசார் வழக்கு பதிவு செய்து சிசிடிவி காட்சிகளை வைத்து விசாரணை நடத்தி வந்தனர். இதில் பிரபல ரவுடி பாம் சரவணன் சகோதரர் தென்னரசு கொலைக்கு பழிதீர்க்கும் வகையில் கொலை நடந்தது தெரியவந்தது. கொலை நடந்த மறுநாளே அரக்கோணம் ஜெயபால், சைதை சந்துரு, யமஹா மணி ஆகிய மூன்று பேர் வழக்கறிஞர் மூலம் மயிலாப்பூர் காவல் நிலையத்தில் சரணடைந்தனர். அதேபோல நெல்லை ராமையன் பட்டியை சேர்ந்த ரவுடிகள் செந்தில் குமார் முத்துக்குமார், அரக்கோணம் மோகன், நவீன், போஸ், சுரேஷ், கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரத்தை சேர்ந்த ரவுடி எட்வின் உள்ளிட்டோர் நெல்லை நீதிமன்றத்தில் சரணடைந்தனர்.

அவர்களை காவலில் எடுத்து விசாரணை நடத்திய போது அரசியல் பிரமுகர்களுக்கு தொடர்பு இருப்பது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட 11 பேர் கொடுத்த தகவலின் அடிப்படையில் ஆயிரம் விளக்கு பகுதியை சேர்ந்த அதிமுக 111வது வட்டச் செயலாளர் சுதாகர் மற்றொரு அதிமுக நிர்வாகி ஜான் கென்னடி ஆகிய இருவருக்கும் ஆற்காடு சுரேஷ் வழக்கில் தொடர்பு இருப்பது உறுதியானது.

இதையடுத்து சைபர் கிரைம் போலீஸ் உதவியுடன் கிழக்கு கடற்கரை சாலை பகுதியில் பதுங்கி இருந்தவர்களை தனிப்படை போலீசார் நேற்று கைது செய்தனர். அவர்களிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். மேலும், அவர்களை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்கவும் திட்டமிட்டுள்ளனர். சென்னையில் ரவுடி கொலை வழக்கில் அதிமுக முக்கிய நிர்வாகிகளே நேரடியாக ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுபற்றி கட்சி தலைமைக்கும் புகார் சென்றது. இதையடுத்து, கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சென்னையை சேர்ந்த 2 அதிமுக நிர்வாகிகளை அதிமுக கட்சியில் இருந்தே நீக்கி எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிக்கை:

அதிமுகவின் கொள்கை-குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதால் தென்சென்னை வடக்கு (கிழக்கு) மாவட்டத்தை சேர்ந்த சி.ஜான்கென்னடி (ஆயிரம்விளக்கு வடக்கு பகுதி அதிமுக மாவட்ட பிரதிநிதி), பி.சுதாகர் பிரசாத் (111 கிழக்கு வட்ட செயலாளர், ஆயிரம் விளக்கு வடக்கு பகுதி) ஆகியோர் இன்று முதல் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார்கள்.

அதிமுக ஆட்சியில் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தை அடுத்த தேக்கம்பட்டி கிராமம் அருகே முறைகேடாக வழங்கப்பட்ட 132 இலவச வீட்டு மனை பட்டாவை ரத்து செய்யக்கோரி காரமடை மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் சுரேந்திரன் தலைமையில் இன்று கலெக்டரிடம் மனு அளிக்க வந்திருந்தனர்.

முதன்மை செஷன்ஸ் நீதிபதி...

3ம் பக்க தொடர்ச்சி

கோரினார்.

இதையடுத்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு: சட்ட விரோத பணப்பரிமாற்ற தடை சட்டத்தின் கீழ் தொடரப்படும் எம்பி, எம்எல்ஏக்களுக்கான வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்களை அமைத்து ஒன்றிய நிதித்துறை 2016ல் உத்தரவு பிறப்பித்துள்ளது. சட்ட விரோத பணப்பரிமாற்ற தடை சட்டத்தில் பிரிவு 43(1)ன் படி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் தான் எம்பி, எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனுவையும், அவர் மீதான சாட்சி விசாரணையையும் முதன்மை அமர்வு நீதிமன்றம் தான் விசாரிக்க வேண்டும். மேலும், முதன்மை அமர்வு நீதிமன்றம் வழக்கு ஆவணங்களை சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றம் செய்த உத்தரவையும் நீதிபதிகள் ரத்து செய்தனர். வழக்கு ஆவணங்களை உடனடியாக முதன்மை அமர்வு நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும் என்றும் உத்தரவில் குறிப்பிட்டுள்ளனர்.

திருச்சியை சேர்ந்த ஒருவர்...

3ம் பக்க தொடர்ச்சி

பல்லடம் அருகே வெட்டி கொலை செய்யப்பட்ட 4 பேர்.

வெட்டிக் கொன்றனர்.

அலறல் சப்தம் கேட்டு வந்து அவரது தம்பி மோகன் ராஜ்(46) மற்றும் மோகன் ராஜின் தாய் புஷ்பவதி(62), செந்தில்குமாரின் சித்திரத் தினம்(58) ஆகியோரை அக்கும்பல் வெட்டிக் கொன்று விட்டு தப்பியோடியது. பொதுமக்கள் மூலம் இத்தகவல் அறிந்து சம்பவயிடம் வந்த பல்லடம் போலீசார் 4 பேர் சடலத்தையும் கைப்பற்றி விசாரணை நடத்தினர். இந்தநிலையில் கொலையாளிகளை பிடிக்க 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டது.

இதில் கொலை சம்பவத்தில் ஈடுபட்டது ஏற்கனவே செந்தில்குமாரிடம் டிரைவராக வேலை பார்த்து வந்த நெல்லை மாவட்டம் வடக்கு அரியநாயகிபுரத்தை சேர்ந்த வெங்கடேஷ் என்கிற செல்வம்(27) என்பது தெரியவந்தது. இதுகுறித்து போலீசார் கூறியதாவது:

வெங்கடேஷ், செந்தில்குமாரின் தவிடு, புண்ணாக்கு நிறுவனத்தில் டிரைவராக வேலை செய்து வந்துள்ளார். டிரைவராக வேலைக்கு சேரும் முன் வெங்கடேஷ் கள்ளக்கிணறு தண்ணீர்பந்தல் பகுதியில் கோழிக்கடை வைத்திருந்தார். கடந்த 6 மாதங்களுக்கு முன்பு பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக இருவருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இதனால் செந்தில்குமார் வெங்கடேசை வேலையை விட்டு நீக்கி உள்ளார். இதனால் ஆத்திரமடைந்த வெங்கடேஷ், செந்தில்குமாரை கொலை செய்ய திட்டமிட்டார்.

4 பேர் வெட்டி கொலை செய்யப்பட்டது தொடர்பாக பல்லடத்தில் சாலை மறியலில் ஈடுபட்ட பா.ஜ.வினர்.

அதன்படி நேற்று இரவு, செந்தில்குமாருக்கு சொந்தமான வீடு அருகே வெங்கடேஷ், மற்றும் அவரது நண்பர்களான திருச்சி மணப்பாறையை சேர்ந்த சின்னசாமி மகன் செல்லமுத்து (24), தேனி மாவட்டம் உத்தம்பாளையத்தை சேந்த சோனை முத்தையா (22) ஆகிய 3 பேரும் சேர்ந்து மது குடித்தனர். அப்போது இங்கு மது குடிக்க கூடாது, வேறு பகுதிக்கு செல்லுமாறு செந்தில்குமார் கூறி உள்ளார். இதனால் அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த 3 பேரும் சேர்ந்து வெங்கடேசையும் அதைதடுக்கவந்தமோகன் ராஜ், புஷ்பவதி, ரத்தினம் ஆகிய 3 பேரையும் அரிவாளால் வெட்டிக் கொலை செய்து விட்டு தப்பியோடினர். இதற்கிடையே திருப்பூர் மாவட்டம் குண்டடம் பகுதியில் பதுங்கியிருந்த திருச்சி மணப்பாறையை சேர்ந்த செல்லமுத்துவை போலீசார் இன்று கைது செய்தனர். மேலும் வெங்கடேஷ், சோனை முத்தையாவை தேடி வருகின்றனர்.

SUPER

சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

CIN: L17111TZ1962PLC001200

பதிவு அலுவலகம்: 'எல்ஜி டவர்ஸ்' தபால் பெட்டி எண். 7113, கிரீன் பீல்ட்ஸ், புளியகுளம் ரோடு, கோயமுத்தூர்–641 045
Phone: 0422-2311711 Fax: 0422-2311611
Email: investors@ssh.saraelgi.com Website: www.superspinning.com

61வது வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தகவல்

அன்புள்ள உறுப்பினர்களே,

நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிமுறைகள், 2015 மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் ("MCA") வழங்கிய தொடர்புடைய சுற்றறிக்கைகள் மற்றும் செக்யூரிட்டிஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா ("செபி") அவ்வப்போது வெளியிடப்பட்ட விதிகளுக்கு இணங்க, 11 ஆகஸ்ட், 2023 தேதியிட்ட வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள வர்த்தகத்தை பரிவர்த்தனை செய்ய நிறுவனத்தின் 61வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) செவ்வாய்கிழமை, 26 செப்டம்பர், 2023 அன்று மதியம் 2.30 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொளி காட்சி (VC)/பிற ஆடியோ காட்சி முறையில் (OAVM) நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. எம்சிஏ/செபி சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனம் 25 ஆகஸ்ட் 2023 இன் படி நிறுவனம் / டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் பங்குதாரர்கள்/உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் AGM/ ஆண்டு அறிக்கையின் அறிவிப்பை அனுப்பியுள்ளது.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்புடன் விளக்க அறிக்கை மற்றும் 2022–23 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளமான www.superspinning.com மற்றும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தைகள் இணையதளம் பிஎஸ்இ லிமிடெட்டின், www.bseindia.com மற்றும் தேசிய பங்கு எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் www.nseindia.com மற்றும் லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் இணையதளமான (LIPL) https://instavote.linkintime.co.in–ல் கிடைக்கிறது மற்றும் பதிவிறக்கம் செய்யலாம்.

உறுப்பினர்கள் VC/OAVM வசதி மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் சேர்வதற்கான வழிமுறைகள் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20 மற்றும் செபியின் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015–ன் 44வது ஒழுங்குமுறை ஆகியவற்றுக்கு இணங்க, LIPL வழங்கும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறையை (remote e-voting) பயன்படுத்தி வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் உறுப்பினர்கள் வாக்களிக்கும் வசதி வழங்கப்படுகிறது. கூடுதலாக, நிறுவனம் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது ("evoting") மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிக்கும் வசதியை வழங்குகிறது. தொலைதூர மின்னணு–வாக்களிப்பு/ மின்னணு–வாக்களிப்புக்கான விரிவான செயல்முறை வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு, திரு.எம்.டி.செல்வராஜ், எப்சிஎஸ்., மெச்ஸ். எம்டிஎஸ் & அசோசியேட்ஸ் எல்எலபி, கம்பெனி செயலாளர்கள், கோயம்புத்தூர், அவர்களை வாக்களிக்கும் செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்யும் ஆய்வாளராக நியமித்துள்ளது.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் மின்னணு முறையில் வாக்களிப்பதற்காக அச்சிடப்பட்ட வழிமுறைகளை உறுப்பினர்கள் கவனமாகப் படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உறுப்பினர்கள் பின்வருவனவற்றையும் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1	அறிவிப்பு/வருடாந்திர அறிக்கை அனுப்பி முடிக்கப்பட்ட தேதி	சனிக்கிழமை, 2 செப்டம்பர், 2023
2	தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு துவங்கும் தேதி மற்றும் நேரம்	சனிக்கிழமை, 23 செப்டம்பர் 2023 காலை 9.00 மணி
3	தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடிவடையும் தேதி மற்றும் நேரம். இந்த தேதி மற்றும் நேரத்திற்கு மேல் மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது	திங்கட்கிழமை, 25 செப்டம்பர் 2023 மாலை 5.00 மணி
4	தொலைதூர மின்னணு வாக்குப் பதிவுக்கு தகுதியான உறுப்பினர்களைத் தீர்மானிப்பதற்கான கட்ஆஃப் தேதி	செவ்வாய்க்கிழமை, 19 செப்டம்பர் 2023

VC/OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை மூலம் தீர்மானத்தின் மீது வாக்களிக்கத்தவர்கள் மற்றும் அவ்வாறு செய்ய தடை விதிக்கப்படாத உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக்கூட்ட கலந்தில் மின்னணு வாக்குப்பதிவு முறையில் வாக்களிக்க தகுதியுடையவர்கள். வருடாந்திர பொதுக் கூட்டத்துக்கு முன்னதாக தொலைதூர மின்னணு–வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் / பங்கேற்கலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை இல்லை.

உறுப்பினர் பதிவேட்டிலோ அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டிலோ, கட்ஆஃப் தேதியில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள நபர் மட்டுமே, தொலைதூர மின்வாக்களிப்பு அல்லது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கும் வசதியைப் பெற தகுதியுடையவர். உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமையானது, கட்ஆஃப் தேதியின்படி நிறுவனத்தின் செலுத்தப்பட்ட சுக்விட்டி பங்கு மூலதனத்தில் அவர்கள் வைத்திருக்கும் பங்குகளின் விகிதத்தில் இருக்கும்.

எவரேனும் ஒருவர், நிறுவனத்தால் மின்னணு முறையில் அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு, நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று நிறுவனத்தின் உறுப்பினராகி கட்ஆஃப் தேதியின்படி பங்குகளை வைத்திருப்பவர், தொலைதூர மின்னணு–வாக்களிப்பு தொடர்பான விரிவான நடைமுறைக்கு நிறுவனத்தின் இணையதளமான www.superspinning.com–ல் வெளியிடப்பட்ட வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பைப் பார்க்கவும். உறுப்பினர்கள் ஏற்கனவே LIPL–ன் மின்னணு–வாக்களிப்பு தளமான https://instavote.linkintime.co.in–ல் பதிவு செய்திருந்தால், அவர் வாக்களிக்க நங்கள் தற்போதைய பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தலாம்.

பங்குதாரரின் மின்னஞ்சல் முகவரி ஏற்கனவே நிறுவனம்/அதன் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் ("ஆர்டிஏ")/டெபாசிட்டரிகளில் பதிவுசெய்யப்பட்டிருந்தால், மின்னணு–வாக்களிப்பிற்கான உள்நுழைவு விவரங்கள் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் அல்லது நிறுவனம்/ டெபாசிட்டரியில் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாதவர்கள், வருடாந்திர அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி, தொலைதூர மின்வாக்களிப்பு மூலம் அல்லது வருடாந்திர பொதுக் கூட்ட கலந்தில் மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கலாம்.

தொலைதூர மின்னணு–வாக்களிப்பு தொடர்பான ஏதேனும் கேள்விகள் இருந்தால், https://instavote.linkintime.co.in–ல் உதவிப் பிரிவின் கீழ் கிடைக்கும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQs") மற்றும் இன்ஸ்டா–வோட் கையேட்டைப் பார்க்கவும் அல்லது enotices@linkintime.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது 022 – 49186000 என்ற எண்ணில் எங்களை அழைக்கவும். வருடாந்திர பொதுக்கூட்டத்திடன்போது மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் வசதியுடன் தொடர்புடைய ஏதேனும் குறைகள் இருந்தால், நீங்கள் instameet@linkintime.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 02249186175 என்ற எண்ணில் எங்களை அழைக்கலாம்.

வாக்களிப்பு முடிவு நிறுவனம் அதன் இணையதளமான www.superspinning.com மற்றும் லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (LIPL) இணையதளத்தில் அறிவிக்கப்படும், மேலும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தைகளுக்கும் தெரிவிக்கப்படும்.

இந்த பொது அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளம் www.superspinning.com மற்றும் LIPL–ன் இணையதளம் அதாவது. https://instavote.linkintime.co.in மற்றும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்